# ஒளி வெள்ளம் ஒளிரக் கொண்டாடுவோம்!



– வி. பாலகிருஷ்ணன்,
ஐபிஎஸ்.,
போலீஸ் கமிஷனர்,
கோவை மாநகரம்.

**கா**வல்துறையில் தலைத் தீபாவளியும் பார்த்திருக்கிறேன். கொலை தீபாவளியும் கண்டிருக்கிறேன். 2012 முதல் 2014 வரை நான் மதுரை எஸ்.பி., ஆக இருந்தபோது தீபாவளி அன்று மாற்று சாதியினர் தீபாவளிப் பட்டாசு வெடிப்பதில் சண்டைப் போட்டுக்கொண்டு கொலைவெறி தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகள் "தீபாவளி" ஏன் வருகிறது என எண்ணவைத்ததுண்டு. அதே போல் 2021ல் திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி., ஆக இருந்த போது தீபாவளி அன்று தலைத் தீபாவளிக் கொண்டாடிய காவலர்களுக்கு வாழ்த்து தெரிவித்து எழுதியக் கவிதையும் கலையாமல் என் மனதில் இருக்கிறது.

தலை தீபாவளிப் பெரும்பாலும் மாப்பிள்ளை வீட்டாருக்கு தீப ஒளியாகக் கண்ணுக்குக்கு குளிர்ச்சியாகவும், பெண்ணைப் பெற்ற பெண் வீட்டாருக்கு அதே ஒளி உடலை எரிக்கும் நெருப்பாகவும் சுடுவதுண்டு. எப்போது இது மாறுமோ அதுதான் உண்மையான தலை தீபாவளி. சிறுவயதில் ஓரிரு சங்கு சக்கரங்கள் மட்டுமே வாங்க வசதியிருந்ததால் அது இன்னும் ஒரு சில கணங்கள் எரியாதா என்று ஏங்கிய ஏக்கமும், சரவெடியை ஒன்றாக வெடித்து விட்டால் ஒரு சில கணங்களில் ஓய்ந்துவிடும் என்பதால், அதைத் தனித் தனியாகப் பிரித்து நாள் முழுவதும் வெடித்த அனுபவமும் உண்டு. எல்லோரும் தீபாவளிக்குப் புத்தாடை அணியும் போது யாரேனும் "உன் தீபாவளிப் புத்தாடை எங்கே?" எனக் கேட்கும்போது "தீபாவளிக்கு நான் புத்தாடை வாங்குவதில்லை, அது எனக்குப் பிடிக்காது" எனக் கூறி என மனதுக்குள் ஏங்கியதும் ஞாபகம் வருகிறது.

ஆனாலும் அவையெல்லாம் இன்று வருத்தத்தை தருவதில்லை. அந்த அனுபவங்கள் இல்லாதிருந்தால் இன்று ஏழைகளின் நிலையை அனுபவ ரீதியாக உணராத ஒரு நாற்காலி நாயகனாய் காவல்துறையில் பணி புரிந்திருப்பேன். அனைத்து மக்களின் பிரச்னைகளை அனுபவப் பூர்வமாக உணர முடிகிறதென்றால் சிறுவயது அனுபவம் தான். நாம் வெடிப்பதற்காக வெடித்துச் சிதறும் உடல்கள் அவ்வப்போது சிவகாசியில் நெஞ்சை நெகிழ வைக்கிறது. ஆனாலும் அதைச் சார்ந்து எத்தனையோ குடும்பங்கள் உயிர் வாழ்கின்றன என்பதும் கவனிக்க வேண்டிய விசயம்.

கடந்த சில ஆண்டுகளாக வீட்டு நாய்களும், தெருநாய்களும் வெடிச்சத்தத்தால் எப்படி பதறுகின்றன என்பதைக் கண்கூடாகக் காண்பதாலும், வெடி வெடித்து அந்தப் புகை மூட்டம் நுரையீரலின் அணுக்களை அழுத்துவதை உணரும்போது தீபாவளி புகையும், சத்தமும் எந்த அளவுக்கு வேண்டும் என்றும் ஒரு புரிதல் வருகிறது. அதனால் தீபாவளி நேரத்தில் ஏழ்மை நிலை ஒரு வகையில் நன்றே என்றும் தோன்றுகிறது.

தீபாவளிக்கு தீபத்தை ஆதாரமாகக் கொண்டு ஒளி வெள்ளம் ஒளிரக் கொண்டாடுவது சாலச் சிறந்தது எனத் தோன்றுகிறது.

நான் மத்திய மண்டலக் காவலர்களுக்காக எழுதியக் கவிதையைத் தமிழகக் காவல்துறையைச் சேர்ந்த மற்றும் சேராத நண்பர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

- தனித்தனி பாதைகள் ஒன்று சேர்ந்தது போல் கிளை நதிகள் ஒன்று சேர்ந்து முழுநதி உருவாவது போல், உருவான திருமண பந்தத்தைப் பலம் பார்க்கும் முதல் உரைகள் தீபாவளி.

- தீபாவளிக்கானக் காரணம் எதுவாக இருப்பினும் தீபஒளி திருவண்ணாமலை விளக்காக மிளிர வேண்டும், வடலூர் விளக்காக வளர வேண்டும்.

- பெண்ணைப் பெற்றோர் சீர் கொடுத்தே சீர் கெட்டதுண்டு. படி கொடுத்தே பாவப்பட்டதுண்டு. தீபாவளி சீர் வேண்டாமென்று சொன்னால் நீ சீர் திருத்த வாதி. குறை கண்டால் நீ குண்டர் சட்டத்திற்கு சரியான நபர்.

- எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது எண்ணமெல்லாம் ஏற்றம் பெறட்டும். தோலோடு ஒட்டும் எண்ணெய் போல் சொந்தங்களை ஒட்டிக்கொள்.

- தீபாவளி புகை தீராத பகை. வளிமண்டலத்திற்கு வைக்கும் வெடிகுண்டு. அளவின்றி வெடித்து அண்டத்தின் கருவைக் கலைத்து விடாதே.

- தங்கைக்கு தலை தீபாவளி தலையை அடமானம் வைக்கும் தம்பி, தமையன் மார்கள். அவர்கள் தலைகாக்கத் தலைமகனாய் எழுந்து வா!

- தலை தீபாவளியின் தனியொருத் தலைவா!

- சீரைத் தவிர்த்து பாரைப் பார்க்கச் செய்!

**புதுமணத் தம்பதியர் அவைவருக்கும் தலைத் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.**

– அமீர் ஹம்ஸா ஹமீது.